CAREERINDIA

# A

SL. No. : R

ಒಟ್ಟು ಪ್ರಶೆಗಳ ಸಂಖ್ಯೆ : 47 ]
Total No. of Questions : 47 ]
ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : **85-T**

**CCE RF**
**REVISED**

[ ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 8
[ Total No. of Printed Pages : 8
**Code No. : 85-T**

இங்கிருந்து பிரிக்கவும்

## ವಿಷಯ : ಸಮಾಜ ವಿಜ್ಞಾನ

## Subject : SOCIAL SCIENCE

**( ತಮಿಳು ಭಾಷಾಂತರ / Tamil Version )**

**( ಹೊಸ ಪಠ್ಯಕ್ರಮ / New Syllabus )**

**( ಶಾಲಾ ಅಭ್ಯರ್ಥಿ / Regular Fresh )**

ದಿನಾಂಕ : 29. 03. 2019 ] [ Date : 29. 03. 2019
ಸಮಯ : ಬೆಳಿಗ್ಗೆ 9-30 ರಿಂದ ಮಧ್ಯಾಹ್ನ–12-30 ರವರೆಗೆ ] [ Time : 9-30 A.M. to 12-30 P.M.
ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 80 ] [ Max. Marks : 80

www.careerindia.com

**பொதுவான குறிப்புகள் :**

1. இந்த வினாத்தாள் புறவய மற்றும் அகவய வகை (Objective and Subjective) வினாக்கள் 47-ஐ கொண்டுள்ளது.
2. இந்த வினாத்தாள் பின்புறமாக மூடி வைக்கப்பட்டுள்ளது (Sealed by reverse jacket). நீங்கள் தேர்வு ஆரம்பிக்கும்பொழுது வலக்கைப் பக்க ஓரத்தை பிரித்து திறக்க வேண்டும். வினாக்களை உள்ளடக்கிய அனைத்துப் பக்கங்களும் சரியாகவும், பிரிக்கப்படாமலும் உள்ளதா என சரிபார்க்கவும்.
3. புறவய மற்றும் அகவய வகை வினாக்களில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்றவும்.
4. வலக்கைப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்கள் அதிகபட்ச மதிப்பெண்ணைக் குறிக்கிறது.
5. மாணாக்கர்கள் விடைகளை எழுதுவதற்கான அதிகபட்ச நேரம் வினாத்தாளின் மேற்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ளது, மாணாக்கர்கள் வினாத்தாளைப் படிப்பதற்கென கூடுதலாக ஒதுக்கப்பட்ட 15 நிமிடங்களையும் அது உள்ளடக்கியது.

TEAR HERE TO OPEN THE QUESTION PAPER
இங்கு ஒட்டியுள்ள பகுதியைப் பிரித்துத் திறக்கவும்

Tear here

CAREERINDIA



I. பின்வரும் வினாக்கள் / மற்றும் முழுமைபெறாத கூற்றுகளுக்கு நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்றே ஒன்று சரியானது அல்லது பொருத்தமானது. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அவ்விடையினை அதற்கென தரப்பட்டுள்ள இடத்தில் விடைக் குறியீட்டு எழுத்துடன் முழுவதுமாக எழுத வேண்டும். $10 \times 1 = 10$

1. 1909-ல் தனி இன தேர்தல் வாக்குச் சாவடி முறையை ஏற்படுத்த காரணம்

   (A) இஸ்லாமியர்களுக்கு தனி பிரதிநிதித்துவம் வழங்குவதற்கு

   (B) ஐரோப்பியர்களுக்காக தனித்தொகுதியை வழங்குவதற்கு

   (C) சீக்கியர்களுக்கு தனிபிரதிநிதித்துவம் வழங்குவதற்கு

   (D) கிறிஸ்துவர்களுக்காக சில தொகுதிகளை ஒதுக்குவதற்கு.

2. முதல் ஆங்கிலேய மைசூர்ப் போர் எந்த உடன்படிக்கையில் முடிவுற்றது

   (A) மைசூர் உடன்படிக்கை (B) சென்னை உடன்படிக்கை

   (C) மங்களூர் உடன்படிக்கை (D) ஸ்ரீரங்க பட்டிண உடன்படிக்கை.

3. 'நியூ இந்தியா' என்ற செய்தி தாளை தொடங்கியவர்.

   (A) ராஜாராம் மோகன்ராய்

   (B) மகாத்மா காந்திஜி

   (C) அன்னி பெசண்ட்

   (D) தயானந்த சரஸ்வதி.

4. ஐ. நா. சபை மனித உரிமைகளை அறிவித்த ஆண்டு

   (A) 1945 (B) 1950

   (C) 1947 (D) 1948.

5. பின் வரும் கூற்றுகளில் ஐ. நா. வின் பாதுகாப்பு சபைக்கு மிக பொருத்தமான கூற்று எது ?

   (A) அது 15 நிரந்தர உறுப்பினர்களை கொண்டுள்ளது

   (B) அது ஐ. நாவின் அமைச்சரவை போல் உள்ளது

   (C) அது பாரிசில் தன் தலைமையகத்தை கொண்டுள்ளது

   (D) இந்தியா தற்போது அதில் நிரந்தர உறுப்பினராகி உள்ளது.

www.careerindia.com

CAREERINDIA



6. கண்ணுக்கு தெரியாத பசி என்பது எதைக் குறிக்கிறது.

(A) ஊட்டச்சத்து (B) குறைவான ஊட்டச்சத்து

(C) செல்வந்தர்களின் பசி (D) சமன்படுத்தப்பட்ட உணவுமுறை.

7. கருமண் உலர் பண்ணை முறைக்கு ஏற்றதாக இருக்க காரணம்.

(A) அதிக மழைபெறும் பகுதியி ருந்து உருவாகி உள்ளது

(B) குறைந்த ஈரப்பதத்தை தக்கவைக்கும் இயல்பை கொண்டது

(C) அதிக ஈரபதத்தை தக்கவைக்கும் இயல்பை கொண்டுள்ளது

(D) பளிங்கு பாறையி ருந்து உருவானது.

8. தாமோதர் ஆற்றில் அணைகட்டப்பட்டதால் ஏற்பட்ட நன்மை யாதெனில்

(A) 'தாமோதர் ஆறு வங்கத்தின் துயரம்' என்ற பழிச்சொல் இனி எப்போதும் இல்லை

(B) அதிகப்படியான நிலச்சரிவுகளை ஏற்படுத்தி உள்ளன

(C) அதிக நிலநடுக்கங்களுக்கு காரணமாயின

(D) பல முக்கிய தொழிற்பகுதிகள் நீரில் மூழ்கின.

9. நேர்முக வரிக்கு உதாரணம் எது ?

(A) கூடுதல் மதிப்பு வரி (B) மத்திய உள்நாட்டு வரி

(C) அஞ்சல் தலை வரி (D) சேவை வரி.

10. ஒரு நபர் 15 இலட்சம் மதிப்புள்ள வாங்கிய காரில் சில பிரச்சனைகள் உள்ளது. ஆனால் கார் கம்பெனி அதற்கு தகுந்த பொறுப்பேற்காமல் அலட்சியப்படுத்துகிறது. தற்போது கார் வாங்கிய அந்த நபர் எந்த அமைப்பிடம் புகார் செய்யலாம்.

(A) மாவட்ட நுகர்வோர் பொதுமன்றம்

(B) மாநில நுகர்வோர் குழு

(C) தேசிய நுகர்வோர் குழு

(D) மாநிலங்களுக்குகிடையேயான நுகர்வோர் பொதுமன்றம்.



www.careerindia.com

CAREERINDIA



II. பின்வரும் வினாக்களுக்கு ஒரு வாக்கியத்தில் விடையளி : 14 × 1 = 14

11. சுத்தி எனப்படும் தூய்மை இயக்கம் ஏன் தொடங்கப்பட்டது ?

12. பெரும் புரட்சியின் போது இந்திய வீரர்கள் ஏன் கொழுப்பு தடவப்பட்ட ராயல் என் பீல்டு துப்பாக்கி தோட்டாக்களை தொட மறுத்தனர் ?

13. சர்தார் வல்லப பாய் பட்டேல் ஏன் இந்தியாவின் இரும்பு மனிதர் என அழைக்கப்படுகிறார் ?

14. மத்திய அரசு எவ்வாறு திபேத்திய அகதிகள் பிரச்சனையை தீர்த்தது ?

15. முதல் உலகப் போருக்குப் பின் அமெரிக்காவில் ஏன் விவசாய உற்பத்தி குறைந்தது ?

16. படைகுறைப்பு (ஆயுத ஒழிப்பு) என்றால் என்ன ?

17. 'த ரிப் பப்ளிக்' (The Republic) என்ற நூலை எழுதியவர் யார் ?

18. தேவதாசி முறை ஒரு மனித தன்மையற்ற பழக்கம். ஏன் ?

19. இந்தியாவின் எந்த மாநிலம் அதிக பரப்பளவில் காடுகளை கொண்டுள்ளது ?

20. இந்தியாவின் கிழக்கு கடற்கரை ஆற்றுப்படுகைகளில் எந்த வகை காடுகள் காணப்படுகின்றன ?

21. கட்டுமான நிறுவனங்கள் ஏன் அலுமினிய பயன்பாட்டுக்கு அதிக முதல் கோரிக்கையை வைக்கின்றன ?

22. மக்களடர்த்தி என்றால் என்ன ?

23. 1993-ல் ஏன் 73 வது சட்டதிருத்தம் கொண்டுவரப்பட்டது ?

24. உலக நுகர்வோர் தினம் எப்போது கொண்டாடப்படுகிறது ?

III. பின்வரும் வினாக்களுக்கு இரண்டி ருந்து நான்கு வாக்கியங்கள் வரை விடையளி :

15 × 2 = 30

25. பக்சார் போரின் முடிவில் ஆங்கிலேயர் அடைந்த நன்மைகள் யாவை ?

26. துணைப்படைத்திட்டம் எவ்வாறு இந்திய மாகாண ஆட்சிப் பகுதிகளை தன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது ?

27. ஆங்கிலேய படையி ருந்த இந்திய வீரர்களின் பரிதாப நிலையை விவரி.

www.careerindia.com

CAREERINDIA



28. படத்திற்கு தொடர்புடைய வினாக்களுக்கு விடையளி.



a) படத்தில் நீவிர் காணும் நபர் யார் ?

b) அவர் எழுதிய நூல் எது ?

29. முசோ னியின் பாசிச கொள்கையின் கோட்பாடுகள் யாவை ?

அல்லது

லெனின் ரஷியாவின் குடியரசு தலைவராக பதவி வகித்தபோது அவர் ஆற்றிய சாதனைகள் யாவை ?

30. தற்போது உலகில் இந்தியா ஓர் ஆற்றல் மிகுந்த நாடாக உருவெடுத்திருக்கிறது. காரணம் கூறுக.

31. இந்தியா மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளுக்குஇடையே எல்லைத் தகராறு இருந்தாலும் அந்நாடுகள் எவ்வாறு உறவை பலப்படுத்தி கொண்டன ?

32. கலவரக்கூட்டம் (Mob) எவ்வாறு ஒரு சமூக விரோத செயல்பாடாகும் ?

33. கொடுக்கப்பட்ட தென்னிந்திய வரைபடத்தில் ஓர் இந்திய இயற்கைப் பிரிவு குறிக்கப்பட்டுள்ளது. அது எப்பகுதி என்று கண்டறிந்து அதன் இரு பொருளாதார முக்கியத்துவத்தை கூறுக.



www.careerindia.com

CAREERINDIA



34. இந்திய பருவக்கால நிலை ஏன் இடத்திற்கு இடம் வேறுபடுகிறது ?

35. விவசாயம் எவ்வாறு இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை தொழில்களின் முன்னேற்றத்துக்கு உதவுகிறது ?

36. அண்மை காலங்களில் மின்பற்றாக்குறை மிகப் பெரும் பிரச்சனையாக உள்ளது. அதற்கான காரணங்கள் யாவை ?

37. சாலை போக்குவரத்து எவ்வாறு இரயில் போக்குவரத்தை விட சிறந்தது என விவரி.

38. பொருளாதார முன்னேற்றத்தை அளவிட ஏன் மனித வளர்ச்சி வழி அலகு (Human Development Index) மிக அவசியமாக உள்ளது ?

39. உலகமயமாக்கல் எவ்வாறு மக்களின் உணவு பழக்கம் மற்றும் ஆரோக்கியத்தை சீரழிக்கிறது ?

IV. பின்வரும் வினாக்களுக்கு ஆறு வாக்கியங்களில் விடை தருக : $6 \times 3 = 18$

40. இந்திய வரலாற்றில் 18 ம் நூற்றாண்டு பல அரசியல் பிரச்சனைகளை கொண்டதாக இருந்தது என்பதை விவரி.

*அல்லது*

ஆங்கில கல்வி முறையின் ப.யன்கள் எவ்வாறு ஒரு புதிய இந்திய தலைமுறையினரை உருவாக்கியது? ஏன் ?

41. வேலையில்லா திண்டாட்டம் எவ்வாறு இந்தியாவின் மிகப் பெரும் பிரச்சனையாக உருவெடுத்துள்ளது ?

*அல்லது*

ஐக்கிய நாட்டு சபையின் நோக்கங்கள் யாவை ?

42. தீண்டாமையை அடியோடு ஒழிக்க எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகள் யாவை ?

*அல்லது*

முறைப்படுத்திய பணியாளர்களின் பண்பியல்புகள் யாவை ?

43. ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு தொழிற்சாலைகள் எவ்வாறு உதவுகின்றன ?

*அல்லது*

நிலச்சரிவுக்கான இயற்கை மற்றும் மனித செயல் காரணங்கள் யாவை ?



www.careerindia.com

CAREERINDIA



44. இந்திய ரிசர்வ் வங்கியின் செயல்பாடுகள் யாவை ?

*அல்லது*

பொது மக்கள் செலவுகளின் நோக்கங்கள் யாவை ?

45. தொழில் முனைவரின் செயல் பாடுகள் (இயங்கு முறைகள்) யாவை ?

*அல்லது*

வங்கி கணக்கை தொடங்குவதால் ஏற்படும் நன்மைகள் யாவை ?

V. பின்வரும் வினாவிற்கு பத்து வாக்கியங்கள் வரை விடை தருக : 4

46. நம் நாட்டு விடுதலை இயக்கத்தில் உழவர்களின் போராட்டம் எவ்வாறு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது ?

VI. 47. இந்தியத் தரைப்படம் வரைந்து, பின்வரும் இடங்களைக் குறிக்கவும் : 1 + 3 = 4

a) இந்திர கோல்

b) காவேரி ஆறு

c) டில் .

**பார்வைத்திறன் அற்றோர்க்கான வினா : (வினா எண் 47க்கான மாற்று வினா)**

பல்நோக்கு ஆற்று பள்ளத்தாக்கு அணைக்கட்டு திட்டங்களின் நோக்கங்கள் யாவை ? 4



www.careerindia.com

CAREERINDIA



www.careerindia.com